# தாயுமானவரின் ஞானதாகம்




ராஜம் பதிப்பகம்

இணையதளத்தில் banukumar.in

# தாயுமானவரின் ஞானதாகம்

மனிதன் இறைவனைத் தன் இயல்பிற்கு ஏற்றவாறு தன் வடிவமாகவே படைத்துக் கொள்கிறான்.

தாயுமனவர், இறைவனின் தன்மையைப் பற்றி மக்கள் தத்தம் சாதனைக்கு அறிவு வளர்ச்சிக்கும ஏற்றவாறே விளக்கிக்கூறியுள்ளார் என்பதை

“பூதலம் ஆகின்ற மாயைமுதல் என்பர் சிலர்.

பொருபலன் அடங்கும் இடமே

பொருள்என்பர் சிலர். கரண முடிவுஎன்பர் சிலர். குணம்

போனஇடம் என்பர் சிலபேர்.

நாதவடிவு என்பர்சிலர். விந்துமயம் என்பர்சிலர்.

நட்டநடு வேஇருந்த

நாம் என்பர் சிலர். உருவம் ஆம் என்பர் சிலர். சுருதி

நாடில் அரு என்பர் சிலபேர்.

பேதம்அற உயிர்கெட்ட நிலையம்என் றிடுவர் சிலர்.

பேசில்அருள் என்பர்சிலபேர்.

பினனம்முன் னும்கெட்ட சூனியமது என்பர்சிலர்.

பிறவுமே மொழிவர்.” (தாயு.பா.9 - பரிபூரா.6)

---

முதற் பொருள் (கடவுள்) என்பது ஐம்பூதங்களும் ஒடுங்குகின்ற மாயை என்று சிலரும்.

- ஐம்பொறிகளும் அவற்றின் புலன் நுகர்வுகளும் அற்ற இடமே என்று சிலரும்.
- அந்தக்கரணம் முடியும் இடம் என்று சிலரும்.
- முக்குணங்கள் அடங்கும் இடமே என்று சிலரும்.
- நாத வடிவே என்று சிலரும்.
- விந்துவே என்று சிலரும்.
- இவற்றுக்கு நடுநாயகமாய் விளங்கும் ஆன்மா என்று சிலரும்.
- உருவம் உள்ளது என்று சிலரும்.
- உருவம் அற்றது என்று சிலரும்.
- தற்போதம் அழிந்த இடம் என்று சிலரும்.
- திருவருளே என்ற சிலரும்.
- தொடக்கமும் முடிவும் இல்லாத வெட்டவெளியே என்று சிலரும்.

வேறு பலவிதமாகக் கூறும் பலரும் இருக்கின்றனர்.

(சாதனை படிப்படியாக உயர்ந்து செல்வதை மேற்சொல்லிய பாடலின் ஒவ்வொரு அடியிலும் காணலாம்,)

இறையுணர்வு அளவு, அவரவர் அறிவு வளர்ச்சியே அளவு கோலாக இருந்துள்ளது என்பது இதிலிருந்துதெரிகின்றது.

"இவையால்

பாதரச மாயமனது சஞ்சலப் படும்அலால்

பரமசுக நிஷ்டைபெறுமோ?

பார்க்கும்இடம் எங்கும்ஒரு நீக்கம்அற நிறைகின்ற

பரிபூர ணானந்தமே! (தாயு.பா.9 - பரிபூரா.6)

இத்தகைய கருத்துக்களால் தாயுமானவர் மனம் சிந்திய பாதரசம் போல் சலனபட்டுள்ளது.

இதனால் தாயுமானவர் இவர்கள் கூற்றையெல்லாம் விடுத்து தானே அம்மெய்ப் பொருளைத் தேடிச் செல்ல முற்படுகின்றார்.

ஞானதாகமோ அவருக்கு நாளுக்கு நாள்அதிகரிக்கின்றனது. ஆனால் செல்லும் மார்க்கத்னை எடுத்துரைப்பார் எவரும் இலர்.

காணும் பொருட்கள் எல்லாவற்றையம விளித்து அப்பரம்பொருளை அவைகள் கண்டதுண்டா என வினவுகின்றார்.

அருமையாக வளர்ந்த குழந்தையைக் காணாத பெற்றோர் அக் குழந்தை இருக்கும் இடத்தை அறிய, காண்போரை எல்லாம் எவ்வாறு வினவுவரோ - அதே போன்று தாயுமானவரும் வினவி வருகின்றார்.

நளன் தமையந்தியைக் காட்டில் தனியே விட்டுப் பிரிந்து சென்ற பின் தமையந்தி இங்குமங்கும் ஓடி நளனைத் தேடுகின்றாள்.

செடி. கொடிகளைப் பார்த்து விம்முகிறாள். மான், பறவை, புள்ளினங்களைப் பார்த்து "நீங்கள் என் கணவன் எங்குள்ளான் என்ற அறிந்து சொல்வீர்களா?" என்று கேட்கின்றாள்.

அது போன்றே தாயுமானவர் இறைவன் மீது அதிகரித்த பித்தால் சந்திர, சூரியர்களையும், காற்று, மழை மேகங்களையும், பார்த்துக் கேட்கின்றார்.

---

“நேரதான் இரவுபகல் கோடா வண்ணம்

நித்தம் வர உங்களைய இந் நிலைக்கே வைத்தார்

ஆரே? அங்கு அவர் பெருமை யென்னே

அடிக்கின்ற சாற்றேநீ ஆரா லேதான்

பேராதே சுழல்கின்றாய் என்பேன் வந்து

பெய்கின்ற முதில்காள்எம் பெருமான் நும்போல்

தாரள மாக்கருணை பொழியச் செய்யும்

சாதகமென் னேகருதிச் சாற்று மென்பேன். (தாயு.பா.157.ஆகார.26)

மற்றும் மண்ணையும் விண்ணையும் விளித்துப் பின் வருமாறு கேட்கின்றார்.

“கருதறிய விண்ணே நீ எங்கும்ஆகிக்

கலந்தனையே உன்முடிவின் காஷி ஆக

வருபொருள்எப் படியிருக்கும் சொல்லாய்என்பேன்

மண்ணேஉன் முடிவில் எது வயங்கும் ஆங்கே

துரியஅறி வுடைச்சேஷன் ஈற்று உண்மை

சொல்லானோ சொல் என்பேன். கருதி யேநீ

ஒருவரைப்போல அனைவருக்கும் உண்மையாம் முன்

உரைஅன்றோ உன் முடிவை உரை நீ என்வேன்.” (தாயு.பா.158.ஆகார.27)

அவருடைய ஐயம் இன்னும தீராமையினால் தொடர்ந்து கடலையும் மற்றும பறவை இனஙகளும விளிக்கின்றார்.

"உறையிறந்து பெருமைபெற்றுத திரைக்கை நீட்டி

ஒலிக்கின்ற கடலேயிவ் உலகம் சூழக்

கரையும்இன்றி நின்னைவைத்தா ரியாரே யென்பேன்

கானகத்துப் பைங்கிளகாள் கமலேமேவும்

வரசிறைவண் டினங்க்ாளோ டிமங்கா டுது

மார்க்ம் அன்றோ நீங்கள்இது வரையிலேயும்

பெரிய பரபூரணமாம் பொருளைக் கண்டு

பேசியது உண்டோ ஒருகால் பேசு என்பேன்" (தாயு.பா.158.ஆகார.28)

தொடர்ந்து மெய்யடியார்களைப் பார்த்து வினவுகின்றார்.

"தேவர்தொழும் வாதவூர்த் தேவே என்பேன்,

திருமூலத் தேவே, இச் சகத்தோர் முக்திக்கு

ஆவல்உறச் சிவ என்வாக் குடனே வந்த

அரசே, சும் மா இருந்து உன் அருளைச் சாரப்

பூஉலகில் வளர் அருண கிரியே, மற்றைப்

புண்ணியர்காள், ஓ என்பேன் புரைஒன்று இல்லா

ஓவியம் போல் அசைவு அறவும் தானே நிற்பேன்,

ஓதறிய துயர் கெடவே உறைக்கும் முன்னே." (தாயு.பா.162.ஆகார.31)

---

மற்றும் சுக முனிவருக்கு “ஏன்” என்று பிரதிதொனி கொடுத்த வண்ணம் தன் வாக்குகளுக்குப் பிரதிதொனி கொடுப்பார் ஒருவரும் இல்லையோ எனவும்,

பேதா பேதங்களை ஒழிந்து ஒப்பற்ற மோன நிலை உண்டாக கல்லாலின் கீழிருந்த தட்சிணாமூர்த்தியாகிய இறைவன் ஒருமுறை உலகத்தைக் கடைக்கணிக்க விருப்பம் கொள்ள மாட்டானோ என்றும”

தலைவனை பிரிந்த தலைவியைப் போலவும் வாட்டம் கொள்ளுகின்றார் தாயுமானவர்.

இவ்வாறு தாயுமானவர் இறைவனது இருப்பிடத்தை அறிய பகிர்முகமாக அலைந்து வாட்டமுற்று வருந்தும் பொழுது

“மூர்த்தி தலம் தீர்த்தம் முறையால் தொடங்கினர்க்க ஓர்

வார்த்தை சொல் சற்குருவும் வாய்க்கும் பராபரமே” (தாயு.பா.791 பாராப.156)

என்பதற்கிணங்க மௌனகுருவின் சந்திப்பு வாய்த்தது.

மௌனகுரு அகத்தில் மெய்ப்பொருளை கண்டவராதலால், தாயுமானவருக்கு அதை உணர்த்த வேண்டி “சும்மா இரு” என்பதின் அறிகுறியாகக் கையமர்த்திக் காட்டினார்.

அது முதல்கொண்டு தாயுமானவர் மௌனத்தைக் கடைபிடித்து வரலானார்.

சுவாமி விவேகானந்தரும் காண்கின்ற பெரியோர்களை எல்லாம் "கடவுளை நீங்கள் கண்டதுண்டோ?" என்று வினவியதாக அவரது சரித்திரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

ஸ்ரீராமகிருஷ்ணரை அணுகிய போதும்அவர் அக் கேள்வியையே கேட்டார். இஃது அகங்காரத்தினாலோ செருக்கினாலே அன்றி உண்மையை அறியும் வேட்கையினால் கேட்கப்பட்டதாகும்.

இதையறிந்த ஸ்ரீராமகிருஷ்ணர் அவரது இதய தாகத்தைத் தணிக்கும் வகையில் பதில் அளித்ததோடு பின்னர் அப்பொருளையும் அவருக்குக் காட்டித் தந்தார்.

மெய்பொருள் தாகம் எவரொருவருக்கு ஏற்படுகின்றதோ அவருக்குத் தக்க காலத்தில் உண்மை உணர்த்தப்படும்.

தாயுமானவர் மௌனத்தில் நின்று மனவெளியில் ஊடுருவிச் சென்று பார்க்கின்றார். எங்கும் பரவெளியாய்த் தோற்றப்படுகின்றனது.

அதில் அண்டங்கள் அடுக்கடுக்காய் அமைந்திருப்பது கண்டு அதிசயிக்கிறார். அவ்வெளியோ ஆகாசத்தைக் காட்டிலும் பல மடங்கு பெரியதாக உள்ளது.

அதில் பல அண்டங்கள் அந்தரத்தில் நிற்கும் தன்மை அவருக்கு மிகுந்த வியப்பை உண்டாக்கிறது. இறைவனின் இவ்வபூர்வ சக்தியைக் கண்டு அவரால் வியக்காமல் இருக்க முடியவில்லை.

"மண்டலத்தின் மிசை ஒருவன் செய்தவித்தை

அகோ எனவும் வார ணாதி

அண்டமவை அடுக்கு அடுக்காய் அந்தரத்தில்

நிறுத்தும்அவ தானம் போல

எண்தரும் நல் அகிலாண்ட கோடியைத் தன்

அருள் வெளியில் இலக வைத்துக்

கொண்டுநின்ற அற்புதத்தை எவராலும்

நிச்சயிக்கக் கூடா வொன்றை." (தாயு.பா.390.மண்டலத்தின்)

இந்திர ஜால வித்தை செய்து காட்டும் ஒருவன் ஒன்றன் பின் ஒன்றாக பல முட்டைகளை ஆகாய வெளியில் நிற்குமாறு காட்டுவது போல முதல்வன் பல்லாயிரக் கணக்கான அண்டங்களும ஆகாயத்தில் வைத்துள்ளான்.

அண்டங்களைக் காண்பதல்லாது அவற்றைப் படைத்த இறைவனை அங்கும் காண முடியவில்லை.

ஆகவே தொடர்ந்து அவ்வெளியின் ஊடே செல்லுகின்றார். சந்திரமண்டலம், சூரிய மண்டலம் இவற்றிற்கு வருகின்றார்.

யோகிகள் இம்மண்டலங்களையும் தம் அகத்தூடே காண்பதாக அவர்களின் திருப் பாடல்களிலிருந்து தெரிகின்றது.

மனோரத்தின் மீது உணர்வு அமர்ந்து செல்லும் பொழுது, இவை செல்லும் பாதையாகிய மனோ வெளியில், இம்மண்டலங்கள் அனைத்தும் தோற்றப்படுகின்றன.

இதனைப் பாரதியாரும் "ஞானரதம்" என்னும் தம் நூலில் விரிவாகச் சொல்லியுள்ளார்.

அண்டத்தில் காணப்படும் அனைத்தும் பிண்டத்திலும் உள்ளது என்பதற்கு இது ஒரு தக்க சான்றாகும். இச்சந்திர சூரிய மண்டலங்களிலும் இறைவனது தன்மையைக் காண முடியவில்லை.

மேலும் அவ்வெளியின் ஊடே செல்லும் பொழுது பல மூர்த்தங்களைப் பார்க்கிறார்.

இறைவனைப் பல வடிவில் வணங்குவதற்கு இந்த மூர்த்தி நிலையில் காணப்படும் உருவங்களே காரணம் என்பதை அறிகின்றார்.

அகத்தில் கண்ட உருவங்ளைப் புறத்திலும் வணங்க அவர்கள் அவ்வுருவச் சிலைகளை ஸ்தாபகம் செய்தார்கள்.

அகத்தில் காணப்பட்ட மூர்த்தங்கள் நீர்க்குமிழியை ஒத்தன ஆகும். நீர்க்குமிழி நீர்மட்டத்துக்கு வந்ததும் நீரோடு ஒன்றாகும் தன்மை போல இம்மூர்த்தங்ககளும் சித்தம் என்னும் குளத்தில் மறைந்து அருவ நிலையே காணப்படும்.

ஆகவே இம்மூர்த்தி நிலைகளும் பொருளாகாவென தாயுமானவர் அறிந்து, மேலும் தொடர்ந்து செல்கின்றார். அவ்வெளியின் ஊடே தச நாதங்களும் ஒலிக்கின்றன.

“ஓராமல் மந்திரமும் உன்னாமல் முக்தி நிலை

ஒன்றோடு இரண்டு என்னாமல்

ஒளிஎனவும் வெளிஎனவும் உருஎனவும் நாதமாம்

ஒலிஎனவும் உணர்வுறாமல்

பாராது பார்ப்பதே ஏது சாதனம் அற்ற

பரம அனு பூதிவாய்க்கும்

பண்பென்று உணர்த்தியது" (தாயு.பா.)

அதாவது உருவம் என்றும், நாதமாகிய ஒலி என்றும் அறியாமல் கண்ணால் காண்பதே எவ்வகைச் சாதனங்களும் இல்லாத மேலான அனுபூதி கிடைத்தற்குரிய உபாயம் என்று இங்கு அவரது அறிவின் ஊடே உணர்த்தப் படுகின்றது.

அவ்வாறு உணர்த்தப்படும் நிலையே வேதாந்த நிலை என்றும், சாதனையின் பின் மனோ நிலையில் அதனை நினைவுக்குக் கொண்டு வருதல் சித்தாந்த நிலை என்றும் சொல்லப்படுகிறது.

இந் நிலைகளையும் தள்ளி மேற்சென்று ஊடுருவிப் பார்க்கின்றார் தாயுமானவர். காட்சிகள் அனைத்தும் மறைந்து ஒரே சூனிய வெளியாகக் காணப்படுகின்றது.

யோகத்தில் காட்சிகளைப் பார்த்துச் செல்வது ஒரு மார்க்கம். அறிவினால் உணர்த்தப் படுவதை கேட்டுச் சென்று மனோ நிலையில் அக்கருத்துக்கைளப் பதிவு செய்தல் மற்றொரு மார்க்கம்.

இவை அனைத்தையும் தள்ளி அருள் வெளியை நாடி இறைவனைக் கூடுதல் பிறிதொரு மார்க்கம் ஆகும்.

இவற்றில் முதற் சொன்ன இரண்டும் இறைவனைக் கூடுதலற்குரிய மார்க்கம் ஆகா.

எனவே தாயுமானவர் மூன்றாவதாகச் சொன்ன மார்க்கத்தையே கடைப்பிடிக்கின்றார். அந்த மார்க்கமே சிறந்தது என்று மானுடத்திற்கும் சொல்லுகின்றார்.

---

குருவின் ஓர் சொல்லை மலையிலக்காகக் கொண்டு ஒழுகிய தாயுமானவருக்கு இச் சூனிய நிலையிலே தான் விளக்கம் ஏற்படுகின்றது.

சொல் ஒளியாகப் பிரகாசிக்கின்றது. அவ்வொளியில் ஆன்ம ஞானம் உண்டான பின்னர் அவ்வொளியின் ஊடே சென்று பிரம்ம நிலையைக் கண்டு தெளிகின்றார்.

கால தேசங்களை வகிக்கும் மாயையைக் கடந்து செல்கின்றார். இங்கு உணர்வும் அற்று விடுகின்றது.

உணர்வு அற்று விட்டமையால் கருவி காரணங்கள் எல்லாம் ஓய்ந்து விட்டன. தொண்ணூற்றாறு தத்துவங்களும் ஒடுங்கி ஏகமான உருவான நிலை ஏற்படுகின்றது.

"அந்நிலை பதிந்தநின் பழவடியர் தம்

சிராயிருக்க நினது அருள் வேண்டும் ஐயனே"

என்றபடி அவரது வேண்டுகோள் இந்நிலையில்பூர்த்தியாகின்றது.

ஆகவே கருவி காரணங்கள் ஓய்ந்த நிலையில் தான் பரமாத்ம ஞானம் பெற்றிருக்க முடியும் என்பதைக் கருதியே தாயுமானவர்

"கருகரணங்கள் ஓய்ந்த தொண்டர்களிடத்திலே

நீ வீற்றிருப்பது,,,,"

தொழும்ப னேற்குளவு புகலாய்"

என்று முடிக்கின்றார் தாயுமானவர்.

---

தாயமானவரைப் போல நாமும் ஞான தாகம் கொண்டு, அவரைப் போல் ஞானத்தை பெறுவோமாக!

சாதனைக்கு தாயுமானவர் பாடல்கள்

சாதனையில் வெற்றிபெற, தாயுமானவரின் ஞானகீதங்களைப்

படியுங்கள், உணருங்கள், பரவசப்படுங்கள்.

ஆனந்தமடையுங்கள்.

அனைவரையும் அழைக்கிறோம்.




